

சென்னை தெற்கு மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் நேற்று சைதை பஜார் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு மகேஷ்குமார் க.தனசேகரன், தொகுதி பொறுப்பாளர்கள் கோவி.லெனின், மாஸ்டர் பெ.சேகர், கணிகை ஸ்டாலின், வி.பி.கலைராஜன், தேர்தல் பணிக்குழு செயலாளர் பி.மணிமாறன், மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம் த.விஸ்வநாதன், வாசுகி பாண்டியன், பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.ராசா, சு.சேகர், துரை.கபிலன், நொளம்பூர் வே.ராஜன், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், ஒன்றிய கழக செயலாளர்கள் துரை.வீரமணி, கோவிலம்பாக்கம் வெங்கடேசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோ.காமராஜ், த.ஜெயகுமார், ஜெ.சண்முகசுந்தரி வரவேற்புரை! பி.ஆண்டவன் தலைமை!

# பம்மல் வடக்கில் கலைஞர் நூற்றாண்டு விழா - சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ.அன்பரசன், ஆரணி மாலா சிறப்புரை!

காஞ்சிபுரம், அக். 28

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி, 29 வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (28.10.2023 சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் சி.எல்.சி சாலை, இலட்சுமிபுரம் சந்திப்பில் நடைபெறுகிறது.

29 வது வட்ட கழகச் செயலாளர் பி.ஆண்டவன் தலைமை வகிக்கிறார்.

கே.சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பபிதா, ச.பிரபு, இரா.குமரேசன், இரா.பாபுஜி, சி.பார்த்தசாரதி, க.சுந்தரமூர்த்தி, இ.ஆர்.சுந்தர், கி.சதீஷ்குமார், ஜி.பாஸ்கர், தி.அழகிரி, ஜெ.விமலா, எம்.ராமலிங்கம், ஆர்.கண்ணன், சி.ருசிந்திரமணி, ஏ.கிருபானந்தன், ஆர்.நந்தகுமார், ஜி.கே.குமார், எஸ்.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார், ஜெ.சண்முக சுந்தரி எம்.சி. ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைக் கழக சொற்பொழிவாளர் ஆரணி மாலா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மேயர் க.வசந்தகுமாரி, இரா.நரேஷ்கண்ணா எம்.சி., வே.கருணாநிதி, எஸ்.கே.நெப்போலியன், கோல்டு டி.பிரகாஷ், முனைவர் எல்.பிரபு, சத்தியபிரபு, வி.ரவிச்சந்திரன், ஆர்.ராஜா, ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், வி.கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ, விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சித்ரா முரளிதரன், ந.மூவேந்தன், க.பசுபதி, சா.குணா, எஸ்.லாசர், எம்.சரவணன், ஜி.கே.அரவிந்த், மௌலிராஜ், சுதாகர், பி.டேனியல், சந்துரு, எச்.கே.வெங்கடேசன், மலர்.மு.கருணாநிதி, எம்.பி.விஜயகுமார், ஜெ.ஜான்சேகர், சு.பாலாஜி, பாக்கியலட்சுமி சங்கர், டி.கதிரவன், வி.ராமலிங்கம், எம்.நாகப்பன், செல்வம், ஜெகநாதன், ஏ.சேகர், தி.ச.நடராஜன், வி.சத்தியவாணி, விஜயகுமார், மா.விஜயகுமார், பி.கல்யாணகுமார், ஆர்.சீனிவாசன், ஸ்ரீதர், டி.எம்.செல்வம், என்.முருகானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். ஜி.துரைராஜ், ஆர்.பாஸ்கர், பால்கார் ரவி, எஸ்.சிவஞானம் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## சென்னை மாவட்டத்தில்

# 16 தொகுதிகளில் 38.68 இலட்சம் வாக்காளர்கள்!

## ஆண்கள் 19 இலட்சம் - பெண்கள் 19.65 இலட்சம் பேர்!

சென்னை, அக்.28-

சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கியுள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான

ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) திருமதி ஆர்.லலிதா நேற்று வெளியிட்டார்.

சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கியுள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான

ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) திருமதி ஆர்.லலிதா நேற்று (27.10.2023) ரிப்பன் கட்டட கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 01.01.2024 ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டின் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இச்சுருக்க முறை திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல் இன்று 27.10.2023 வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரைவு வாக்காளர் பட்டியல் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் 4, 5, 6, 8, 9, 10, 13 மற்றும் அனைத்து வாக்குசாவடி மையங்களிலும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். பொதுமக்கள் தங்களது பெயர்கள் மற்றும் குடும்பத்தாரர்களது பெயர்கள் குறித்த விபரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா அல்லது இல்லையா என்பது குறித்து சரிபார்த்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கபடாமல் உள்ளவர்கள் மற்றும் 01.01.2024 அன்று 18 வயது பூர்த்தி அடைபவர்கள் படிவம் 6ஐ பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக படிவம் 7ஐ பூர்த்தி செய்தும், சட்டமன்றத் தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், மேலும் வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் திருத்தங்கள் செய்ய படிவம் 8ஐ பூர்த்தி செய்தும் அதற்கான ஆவண ஆதார நகலினை இணைத்தும் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர், சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் 27.10.2023 முதல் 09.12.2023 முடிய உள்ள காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம். மேலும், 04.11.2023, 05.11.2023, 18.11.2023 மற்றும் 19.11.2023 (சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில்) ஆகிய நாட்களில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. அந்த முகாம் நாட்களையும் படிவங்கள் 6, 6A. 7 மற்றும் 8 வழங்க பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும், பொதுமக்கள் இணையதளம் மூலமாகவும் தங்களுடைய பெயர்கள் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம். (இணைய தள முகவரி - https://voters.eci.gov.in/ ), விண்ணப்பங்களை வலைதளம் மூலமாக மேற்கொள்ள வாக்காளர்கள் கோரப்படுகின்றனர்.

சென்னை மாவட்டத்தில் 3,719 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. அதிகபட்சமாக பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் 284 வாக்குச்சாவடிகளும், குறைந்தபட்சமாக எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் 169 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு ஏற்கனவே 05.01.2023 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர்கள் பட்டியலின்படி ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை 19,09,512, பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 19,71,653, இதர வாக்காளர்களின் எண்ணிக்கை 1,112, மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 38,82,277 ஆகும்.

நடைபெற்று முடிந்த தொடர் திருத்தத்தில் சென்னை மாவட்டத்தில் 16,935 ஆண் வாக்காளர்கள், 17,911 பெண் வாக்காளர்கள், 20 இதர வாக்காளர்கள் என மொத்தம் 34,866 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், 24,536 ஆண் வாக்காளர்கள், 24,415 பெண் வாக்காளர்கள் மற்றும் 12 இதர வாக்காளர்கள் என மொத்தம் 48,963 வாக்காளர்களின் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். நடைபெற்று முடிந்த தொடர் திருத்தத்தில் 19,01,911 ஆண் வாக்காளர்கள், 19,65,149 பெண்வாக்காளர்கள் மற்றும் 1,118 இதர வாக்காளர்கள் என மொத்தம் 38,68,178 வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. .

தற்போது வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலின்படி சென்னை மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை சட்டமன்றத் தொகுதி வாரியாக கீழ்கண்டவாறு உள்ளது.

மூன்றாம் பாலின வாக்காளர்கள் 1,118 பேர், சென்னையில் மொத்த வாக்காளர்கள் 38 இலட்சத்து 68 ஆயிரத்து 178 பேர், இதில் ஆண்கள் 19 இலட்சத்து ஆயிரத்து 911 பேர், பெண்கள் 19 இலட்சத்து 65 ஆயிரத்து 149 பேர் ஆவர்.

வாக்காளர் எண்ணிக்கை குறைந்தபட்சமாக எண்18 துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் 1,70,254 வாக்காளர்களும், அதிக பட்சமாக எண்26 வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் 3,07,460 வாக்காளர்களும் உள்ளனர்.

ஜனநாயகத்தினை வலுப்படுத்த, தகுதியுள்ள அனைத்து பொதுமக்களும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற ஏதுவாக வரைவு வாக்காளர் பட்டியலினைப் பார்வையிட்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) (பொ) திரு.குலாம் ஜிலானி பாபா, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாவட்ட கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமையில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து இயக்கம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்

திருவள்ளூர் அக் 28;-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க, திமுக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுருத்தி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி, மாணவரணி மற்றும் மருத்துவரணி சார்பில் ஊத்துக்கோட்டையில் தனியார் திருமண மண்டபத்தில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற மாபெரும் கையெழுத்து இயக்கம் நடந்தது. இதில் திருவள்ளூர் திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்எல்ஏ தலைமை தாங்கினார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் வரவேற்றார்.

கழக சொத்து பாதுகாப்பு குழு துணை தலைவர் இ.ஏ.பி.சிவாஜி, தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, மாநில மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், வெ.அன்புவாணன், மு.கதிரவன், டாக்டர் பரிமளம், வெங்கடாசலபதி, அபிராமி குமரவேல் முன்னிலை வகித்தார்கள்

சிறப்பு அழைப்பாளராக மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ சிறப்புரையாற்றி கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார் அப்போது பேசியதாவது,

நீட் எதிர்பு 2016 ம் ஆண்டு முதல் போராடி வருகிறோம், அரியலூரை சேர்ந்த மாணவி அனிதா மின்சார வசதி கூட இல்லாமல் படித்தார். ஆதி திராட இனத்தை சேர்ந்த மாணவி அனிதா பிளஸ் டூவில் 1200 - 1176 மதிப்பெண் பெற்றார். அவருக்கு மருத்துவ சீட் கிடைக்க வில்லை இதனால் மனம் உடைந்து மாணவி இறந்தார். மேலும் பல மாணவ மாணவிகள் நீட் தேர்வால் மரணமடைந்துள்ளார்கள். ஆகவே நீட் விலக்கு நம் இலக்கு என்ற அடைபடையில் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என் தற்போது கையெழுத்து இயக்கம் நடத்தி வருகிறோம். இதில் 50 நாட்களில் 50 லட்சம் பேரிடம் கையெழுத்து இயக்கத்தை நடத்தி ,

இந்த கையெழுத்தை வருகிற டிசம்பர் மாதம் 17 தேதி இளைஞரணி சார்பில் சேலம் மாநாட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் ஒப்படைப்போம் என்று பேசினார்.

இதில் கல்லூரி, மாணவ மாணவிகள் கழக நிர்வாகிகள் நீட்டுக்கு எதிராக கையெழுத்திட்டு அங்கு வைத்திருந்த பெட்டியில் போட்டனர். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மு.மணிபாலன், ஆ.சக்திவேல், வள்ளூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், கா.சு.ஜெகதீசன், ஜான்(எ)பொன்னுசாமி, நா.செல்வசேகரன், ஜி.ரவிம்குமார், பி.முத்து, க.சு.தமிழ்உதயன், அப்துல் ரஷீத், கே.ஆர்.குமரவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.மோகன்பாபு, எம்.முரளிதரன், டி.சங்கர், செ.யுவராஜ், இரா.கதிரவன், மருத்துவ அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் இறுதியில் மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் வில்சன் நிலவழகன் நன்றி கூறினார்.

## திருவள்ளூர் - திருத்தணி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட

# பாக முகவர்கள் (BLA2) பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர்– திருத்தணி எஸ்.சந்திரன். எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் தோறும் பாகமுகவர்கள் (BLA-2) ஆலோசனைக் கூட்டம் வருகிற 31.10.2023 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் நடைபெறும்.

**திருவள்ளூர் சட்ட மன்ற தொகுதி**

| | | |
|---|---|---|
| திருவள்ளூர் நகரம் | சி.சு.ரவிச்சந்திரன் நகர கழக செயலாளர் | V.S.சதீஷ் மாவட்ட தலைவர் - வழக்கறிஞரணி |
| பூண்டி மேற்கு | D.கிருஷ்டி (எ) அன்பரசு ஒன்றிய கழகசெயலாளர் | B.K.நாகராஜ் - மாவட்ட அமைப்பாளர் - வழக்கறிஞரணி |
| திருவாலங்காடு கிழக்கு | S.மகாலிங்கம் ஒன்றிய கழக செயலாளர் | ராயல் பாஸ்கர் - மாவட்ட துணை அமைப்பாளர் - வழக்கறிஞரணி |
| திருவாலங்காடு மேற்கு | கூளூர் M.ராஜேந்திரன் ஒன்றிய கழக செயலாளர் | B.K.நாகராஜ் - மாவட்ட அமைப்பாளர் -வழக்கறிஞரணி |
| கடம்பத்தூர் மேற்கு | மோ.ரமேஷ் ஒன்றிய கழக செயலாளர் | த.தானியேல்- மாவட்ட துணை அமைப்பாளர் - வழக்கறிஞணி |
| கடம்பத்தூர் கிழக்கு | K.அரிக்கிருஷ்ணன் ஒன்றிய கழக செயலாளர் | ஜெ.லூகா - மாவட்ட துணை அமைப்பாளர் - வழக்கறிஞணி |

**திருத்தணி சட்ட மன்ற தொகுதி**

| | | |
|---|---|---|
| பள்ளிபட்டு வடக்கு | சி.ஜெ.சீனிவாசன் ஒன்றிய கழக செயலாளர் | M.பொன்னுசாமி கழக வழக்கறிஞர் |
| பள்ளிபட்டு மத்தியம் | பி.டீ.சந்திரன் ஒன்றிய கழக செயலாளர் | R.முரளி. மாவட்ட துணை அமைப்பாளர் - வழக்கறிஞரணி |
| பள்ளிபட்டு தெற்கு | ஜீ.ரவிந்திரா ஒன்றிய கழக செயலாளர் | N.குமார் கழக வழக்கறிஞர் |
| திருத்தணி கிழக்கு | பா.ஆர்த்தி ரவி ஒன்றிய கழக செயலாளர் | L.அறிவழகன், மாவட்ட துணை அமைப்பாளர் - வழக்கறிஞரணி |
| திருத்தணி மேற்கு | என்.கிருஷ்ணன் ஒன்றிய கழக செயலாளர் | J.ராமதாஸ் கழக வழக்கறிஞர் |
| R.K.பேட்டை கிழக்கு | பி.பழனி ஒன்றிய கழக செயலாளர் | R.ரமேஷ் கழக வழக்கறிஞர் |
| R.K.பேட்டை மேற்கு | சி.என்.சண்முகம் ஒன்றிய கழக செயலாளர் | A.வேதமணி கழக வழக்கறிஞர் |
| திருத்தணி நகரம் | வி.வினோத்குமார் நகர கழக செயலாளர் | T.M.பவானி முருகன், மாவட்ட துணை தலைவர் வழக்கறிஞரணி |
| பள்ளிபட்டு பேரூர் | எம்.ஜெ.ஜோதிகுமார் பேரூர் கழக செயலாளர் | T.சௌந்தராஜன் கழக வழக்கறிஞர் |
| போதட்டூர் பேட்டை பேரூர் | டி.ஆர்.கே.பாபு பேரூர் கழக செயலாளர் | K.நாகராஜ் கழக வழக்கறிஞர் |

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.**
செயலாளர் - திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

# மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகக் கூட்டம்!

## பகுதிச்செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, அக்.28-

மதுரவாயல் தெற்கு பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (28.10.2023, சனிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு காரம்பாக்கத்தில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் பி.எம்.செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுபோது இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர். அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், இளைஞரணி பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. 2023 நவம்பர் 5 பாகமுகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம்

2. 2023 டிசம்பர் 17 சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநாடு

3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பங்கேற்கும்

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் கொடியேற்று விழா நவம்பர் மாதத்திற்கு ஒத்திவைப்பு!

### மாவட்ட கழகச் செயலாளரும் – அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை வருடத்திற்கு 100 நிகழ்ச்சி நடத்த திட்டமிட்டு மாதம் 10 நிகழ்ச்சி என இதுவரை 49 நிகழ்ச்சி நடத்தி முடித்து உள்ளோம். அக்டோபர் மாதத்துக்கான பத்தாவது நிகழ்ச்சி ஐம்பதாவது நிகழ்வாக கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு கழக இரு வண்ண கொடியேற்றும் விழா மற்றும் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் கூட்டம் நவம்பர் மாதத்துக்கு மாற்றப்பட்டதால் வருகின்ற 31/10/2023 அக்டோபர் மாத பத்தாவது நிகழ்வாகவும் மொத்தமாக ஐம்பதாவது நிகழ்வாகவும் கலைஞர் நகர் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா தெருமுனை கூட்டம் 64 & 64அ வட்ட கழக செயலாளர்கள் ஆர். விஜய் ஆனந்த், சி.துரைசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் “இனியன் அமுதன்” கலந்து கொண்டு உரையாற்றுகின்றார் .

அமைச்சர் **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**,
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

## 26ஆம் ஆண்டு நினைவு நாள்



28.10.2023

கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

நீங்கள் மறைந்த இந்நாளில் எங்களின்
கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்
என்றும் உங்களின் நினைவில் வாழும் நெஞ்சங்கள்

மகன்கள்: எஸ்.சிதம்பரம், எஸ்.கந்தக்குமார், பூச்சி எஸ்.முருகன்
மகள்கள் : ஸ்ரீமதி பேபி (எ) அபுத்தங்க ஸ்ரீமதி வடிவு,
ஸ்ரீமதி சாந்தி, ஸ்ரீமதி ராஜாமணி
மற்றும் பேரன், பேத்திகள், மருமகன்கள், மருமகள்கள்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்! தலைமை சைதை சாதிக்!

# சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு சார்பில் கையெழுத்து இயக்கம்!

## முன்னிலை அரவிந்த் ரமேஷ் - பிரபாகர்ராஜா - எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ்!

சென்னை, அக்.28-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சார்பில் தமிழக மாணவர்களின் மருத்துவ கனவை சிதைக்கும் நீட் விலக்கு மசோதாவிற்கு ஜனாதிபதி ஒப்புதல் தரக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று 27.10.2023 துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் சைதை சாதிக் தலைமையில் எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., காரப்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., ஏ.வி.எம். பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில், த.மோகன்குமார் எம்.சி., கிருஷ்ண குமார், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் தனிமன்சாரி ரஹ்மத்துல்லா, ஜெயபிரகாஷ் வசுமதி, பருமன் அலீ, அன்சார் கான், நந்தனம் நூருல்லா, சையத் கையூம் மற்றும் கழக முன்னோடிகள் இஸ்லாமிய பெருமக்கள் கலந்து கொண்டு நீட்டுக்கு எதிராக தன்னுடைய கையெழுத்தை பதிவு செய்தனர்.




கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ், மாவட்ட மருத்துவ அணி, அமைப்பாளர் வில்சன் நிலழகன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமையில் கழக ஆதிதிராவிட நலகுழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் இ.ஏ.பி.சிவாஜி, ஜெ.மூர்த்தி, மு.பகலவன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், வெ.அன்புவாணன், மு.கதிரவன், டாக்டர் பரிமளம், வெங்கடாசலபதி, அபிராமி குமரவேல், மு. மணிபாலன், ஆ.சக்திவேல், வள்ளூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், கா.சு.ஜெகதீசன், ஜான்(எ) பொன்னுசாமி, நா.செல்வசேகரன், ஜி.ரவிம்குமார், பி.முத்து, க.சு.தமிழ்உதயன், அப்துல்ரஷீத், கே. ஆர்.குமரவேல், ஜெ.மோகன்பாபு, டி.சங்கர், செ.யுவராஜ், இரா.கதிரவன் உள்பட பலர் உள்ளனர்